செய்தி வெளியீடு எண் : 411 நாள் : 21.02.2025

# மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களை திரைப்படத்துறையினர் நேரில் சந்தித்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது பையனூரில் குடியிருப்புகள் கட்ட குத்தகைக்கு வழங்கப்பட்ட நிலங்களின் அரசாணைகளை தற்போது பயன்படுத்திடும் வகையில் புதுப்பித்து வழங்கியதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 2010 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம் பையனூரில் தெரிவு செய்யப்பட்ட 90 ஏக்கர் நிலத்தில், தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனத்திற்கு (FEFSI) 65 ஏக்கர், தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத்திற்கு 10 ஏக்கர், தமிழ்நாடு சின்னத்திரைக் கலைஞர்கள் சங்கத்திற்கு 8 ஏக்கர் மற்றும் தென்னிந்திய நடிகர் சங்கத்திற்கு 7 ஏக்கர் என அச்சங்கங்களின் உறுப்பினர்களுக்கான அடுக்குமாடி குடியிருப்பு கட்டுவதற்காக தொண்ணூற்று ஒன்பது (99) ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு வழங்கி அரசாணைகள் வெளியிடப்பட்டன. மேலும் ஆண்டுக் குத்தகையாக ரூ.1000/- வீதம் குத்தகை நிர்ணயம் செய்து, தமக்கென அமைத்துள்ள வீட்டுவசதி சங்கங்களின் மூலம் அடுக்குமாடி கட்டி சங்க உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு செய்திடவும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டன.

நிபந்தனைகளின்படி, மூன்று ஆண்டுகளுக்குள் குடியிருப்புகள் கட்டப்பட்டிருக்க வேண்டிய நிலையில், அடுக்குமாடி வீடுகள் கட்டப்படாததால், மேற்கண்ட சங்கங்கள் அரசாணைகளை புதுப்பித்துத் தர வேண்டி 2024 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கோரிக்கை வைத்தனர்.

எந்த நோக்கத்திற்கு குத்தகைக்கு நிலம் வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காக மட்டுமே, அதே நிபந்தனைகளுடன், ஆணை வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட அனுமதி வழங்கி, 20.2.2025 அன்று அரசாணை வெளியிடப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது பையனூரில் குடியிருப்புகள் கட்ட குத்தகைக்கு வழங்கப்பட்ட நிலங்களின் அரசாணைகளை தற்போது பயன்படுத்திடும் வகையில் புதுப்பிக்கப்பட்ட அரசாணையை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (21.2.2025) திரைப்படத்துறையினரிடம் வழங்கினார்.

அரசாணைகளை புதுப்பித்து வழங்கியதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் திரைப்படத்துறையினர் நன்றி தெரிவித்தார்கள்.

**இந்நிகழ்வு குறித்து மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி**

நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசை பொறுத்தவரை, கலைத்துறையினுடைய முன்னேற்றத்திற்காக எப்போதுமே பாடுபட்டிருக்கிறோம். திரைக் கலைஞர்களுடைய நலனில் என்றைக்கும் முழு அக்கறையோடு இந்த அரசு செயல்பட்டிருக்கிறது.

அந்த அடிப்படையில், கடந்த 2010–ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சியில், தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனம், தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம், தென்னிந்திய நடிகர் சங்கம், தமிழ்நாடு சின்னத் திரை நடிகர்கள் சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்கள் பயன்பெறுகின்ற வகையில், சென்னை, கேளம்பாக்கத்தை அடுத்த பையனூரில் 90 ஏக்கர் இடத்தை ஆண்டுக்கு 1000 ரூபாய் வீதம் 99 ஆண்டுகள் லீஸ்–க்கு (குத்தகைக்கு) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழங்கியிருந்தார்கள். அரசாணையின்படி, அந்த இடத்தில் மூன்று ஆண்டுகளுக்குள் அவர்கள் அந்த கட்டிடங்களை கட்டி பயன்படுத்தியிருக்க வேண்டும். அதில் காலதாமதம் ஆகிவிட்டது. எனவே, நம்முடைய ஆட்சி அமைந்தவுடன் அந்த அமைப்பபைச் சேர்ந்தவர்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்களையும், என்னையும் சந்தித்து அதை புதுப்பித்து (renewal) செய்து தரவேண்டும் என்று வேண்டுகோள் வைத்திருந்தார்கள். ஆகவே, குத்தகை பெற்ற சங்க நிர்வாகிகள வைத்திருந்த கோரிக்கையின் முக்கியத்துவத்தை அறிந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்த கோரிக்கையை ஏற்று அரசாணையை புதுப்பிக்க உத்தரவிட்டார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குத்தகைக்கு வழங்கிய அந்த 90 ஏக்கர் இடத்தின் இன்றைய சந்தை மதிப்பு (Market value) கிட்டடத்தட்ட 180 கோடி ரூபாய் இருக்கும். ஆனாலும், அதே இடத்தை திரைத் துறையின் நலன் கருதி, மீண்டும் அவர்களிடமே குத்தகைக்கு விடுகின்ற வண்ணம் புதுப்பிக்கப்பட்ட அந்த அரசாணையை இன்றைக்கு அவர்களிடத்தில் வழங்கப்பட்டிருக்கிறது. இதில் மேற்கண்ட சங்கத்தினர் அடுக்கு மாடி குடியிருப்புகளை கட்டிக் கொள்ளலாம் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

புதுப்பிக்கப்பட்ட அரசாணையின் மூலம், இடத்தினை பெற்ற திரைத்துறை சங்கத்தினருக்கு என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன் என்று மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர்

மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.பெ. அமுதா, தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவர் திரு. நாசர், துணைத் தலைவர்கள் திரு. பூச்சி முருகன், திரு. கருணாஸ், செயலாளர் நடிகர் திரு. ராஜேஷ், திரு. V.தாசரதி, தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனத் (பெப்ஸி) தலைவர் திரு. ஆர்.கே.செல்வமணி, துணைத் தலைவர் திரு.அசோக் மேத்தா, தமிழ்நாடு சின்னத்திரை கலைஞர்கள் கூட்டமைப்பின் தலைவர் திரு. மங்கை அரிராஜன், தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத்தின் தலைவர் திரு.முரளி ராமநாராயணன், செயலாளர் திரு. கதிரேசன், துணைச் செயலாளர் திரு.செளந்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu